# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 175/மா/2017

ஆணை எண். 223/2017

நாள் : 08/09/2017

**ஊர் பொதுமக்கள்,**
**ஒட்டன் சத்திரம்.** – முறையீட்டு மனுதாரர்

**திருமதி பா. பழனியம்மாள்,**
**முன்னாள் நகராட்சி மன்றத் தலைவர்,**
**ஒட்டன் சத்திரம்.** – எதிர்மனுதாரர்கள்

ஒட்டன் சத்திரம் ஊர்பொதுமக்கள் என முகவரியிட்டு கையொப்பங்கள் இடப்படாத மனு ஒன்று அரசின் தலைமைச் செயலர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட மனுவினை அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் துணைச் செயலர் அவர்கள் இம்முறைமன்ற நடுவத்தின் நடவடிக்கைக்காக அனுப்பியுள்ளார். மேற்குறிப்பிட்ட மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் காரணங்களினால் தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது :-

## ஆணை

ஒட்டன் சத்திரம் நகராட்சியின் முன்னாள் நகர்மன்றத் தலைவர் நகராட்சிப் பணத்தைக் கொள்ளை அடித்து பினாமி சொத்துக்கள் வாங்கி உள்ளார் என்றும், கோடிக்கணக்கான மதிப்பீட்டில் பங்களா கட்டியுள்ளதுடன் தனது மகளுக்கு மருத்துவமனையும் கட்டிக்கொடுத்துள்ளார் என கையொப்பம் இடப்படாத ஊர்பொதுமக்கள் எனக்குறிப்பிட்டு வரப்பெற்ற மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வரி செலுத்தாமல் வருமான வரி ஏய்ப்பு செய்துள்ளார் என்றும், தெருக்களில் பைப் இணைப்பு வழங்குவதற்கு ஊர்மக்களிடம் கையூட்டு பெறப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட மனு தலைமைச் செயலருக்கு முகவரியிடப்பட்டு அரசிடமிருந்து இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றுள்ளது. குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொள்ள போதுமான ஆதார ஆவணங்களை தாக்கல் செய்யப்படவில்லை. ஊர்பொதுமக்கள் கையொப்பமிட்டோ அல்லது பொதுமக்கள் சார்பாக மனுதாரரின் பெயர் மற்றும் முகவரியைக்

குறிப்பிட்டும் இம்மனு அனுப்பப்படவில்லை. முகவரி தெரியாததால் விசாரணைக்கு அழைப்பாணை அனுப்ப இயலவில்லை. எனவே, போதுமான ஆதாரங்கள் இல்லாத நிலையிலும், முகவரி இல்லாத நிலையிலும் அரசு மூலம் பெறப்பட்ட மனுமீது உரிய நடவடிக்கை எடுக்க இயலாத நிலை உள்ளது. எனவே, மனுவினை தள்ளுபடி செய்யலாம் எனக் கருதி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2017– ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 8–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

**நகராட்சி ஆணையர்,**
**ஒட்டன் சத்திரம் நகராட்சி,**
**ஒட்டன் சத்திரம்.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்–2**